Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 86

வெள்ளிக்கிழமை
20 பெப்ரவரி 2026

மாசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## அத்துமீறி மீன்பிடி தமிழக மீனவர்கள் 22 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 20
அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், தமிழக மீனவர்கள் 22 பேர் யாழ்ப்பாணம் நெடுந்தீவு மற்றும் மன்னார் கடற்பரப்புகளில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.
இலங்கைக் கடற்பரப்பில் இடம் »11

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்

# நிழல் அமைச்சர்கள் ஊடாக வடக்குமாகாணத்தில் ஆட்சி

### கஜேந்திரகுமார் எம்.பி. தாக்கு



கொழும்பு, பெப்ரவரி 20
வடக்கு மாகாணசபை இயங்காமல் இருக்கின்ற நிலையில், மாகாண அதிகாரங்களுக்கு உட்பட்ட ஒவ்வொரு துறைக்கும் நிழல் அமைச்சர்களை நியமித்து ஆட்சி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் குற்றஞ்சாட்டியுள்ளார். »11

இன அழிப்பில் ஈடுபட்ட

## இராணுவத்தின் கோரமுகமே தையிட்டி திஸ்ஸ விகாரை!

கொழும்பு, பெப். 20
இன அழிப்புப் போரில் ஈடுபட்ட இராணுவத்தின் கோரமுகமே தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரை.
இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு காணிகளை இழந்த மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற »11



## யாழ். பல்கலைப் பட்டமளிப்பு; சாதித்த வாழ்வக மாணவர்கள்

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40ஆவது பட்டமளிப்பு விழாவின் மூன்றாவது நாளான நாளை சனிக்கிழமை சுன்னாகம் வாழ்வகம் விழிப்புலனற்றோர் அமைப்பைச் சேர்ந்த »11

## யாழ்ப்பாணத்தில் பரவலாக எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்தின் இதர பகுதிகளிலும் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.
கடந்த சில நாள்களாக இலங்கையின் பல்வேறு பகுதிகளில் எரிவாயு விநியோகம் »11

## பயங்கரவாதத்துக்கு எதிரான எந்தச் சட்டமும் வேண்டாம்!

### யாழ். பல்கலையில் கையெழுத்து

கொழும்பு, பெப். 20
பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும். அதேநேரம் மாற்றுச் சட்டங்கள் அவசியமில்லை என்று வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு முன்பாக நேற்றுக் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பமானது.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம், யாழ்ப் »11



யாழ். பல்கலைப் பட்டமளிப்பு

## நயினாதீவு மாணவிக்கு 8 தங்கப்பதக்கங்கள்!

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ். பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழாவில்நயினாதீவைச்சேர்ந்த மாணவியொருவர் 8 தங்கப்பதக்கங்களை வென்று சாதனை படைத்துள் »11

## எரிவாயு கையிருப்பில்; அச்சப்பட வேண்டாம்!

### லிட்ரோ அறிவிப்பு

கொழும்பு, பெப். 20
போதுமான எரிவாயு சிலிண்டர்கள் கையிருப்பில் உள்ளன. ஆதலால் மக்கள் தேவையற்ற வகையில் அச்சப்பட வேண்டாம் என்று லிட்ரோ நிறுவனம் நேற்று அறிவித்துள்ளது.
நாடெங்கும் எரிவாயுவுக்கு திடீர்த் தட்டுப்பாடு ஏற்பட் »11



இந்தியாவின் நிதியுதவியில்

## காங்கேசன்துறை துறைமுகம் விரைவில் முழு அபிவிருத்தி!

யாழ்ப்பாணம், பெப். 20
காங்கேசன்துறை துறைமுகம் விரைவில் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும்என்று சிவில்விமானப் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் நேற் »11

## யாழ். விமான நிலையத்தில் விஸ்தரிப்புப் பணி துரிதம்!

### அமைச்சர் அநுர கருணாதிலக்க நம்பிக்கை



யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை விஸ்தரிக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெறும் என்று அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார். »11

முச்சந்தி முனி

“கடலில மீன் பிடிபடுகுதோ இல்லையோ இந்திய மீனவர் மட்டும் வகைதொகையாப் பிடிபடுகினம் கண்டியளோ”

புலிகளின் தலைவர் பிரபாகரன்

## இராணுவத்திடம் சரணடைவதே புலிகளுக்கு இருந்த ஒரே தெரிவு

### பொன்சேகா கூறியது பழைய கதை நாமல் ராஜபக்ச எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, பெப். 20
விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இராணுவத்திடம் சரணடைய வேண்டும் என்பது மட்டுமே அவருக்கு இருந்த ஒரே தெரிவு.
இதை மஹிந்த ஏற்கனவே கூறியுள்ளார். ஆதலால், பொன்சேகா வெளிப்படுத்தியது புதிய தகவல் அல்ல என்று நாடாளுமன்ற »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 19.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4352 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 19 52 69 76 |
| விசேட எழுத்து | N |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 19.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1419 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 25 39 42 57 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 19.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0378 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 8 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 19.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2458 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 13 30 71 75 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 19.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6110 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 1 3 0 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 19.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2140 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 01 10 16 34 |
| விசேட எழுத்து | D |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 19.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0226 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 15 36 44 |

சட்டவிரோதமான

# 'வீஞ்சி' மீன்பிடி முறையை தடைசெய்யக் கோரி மனு

யாழ்ப்பாணப், பெப்.20

**தடைசெய்யப்பட்ட கனரக உழவு இயந்திரத்தைப் (வீஞ்சி) பயன்படுத்தி மேற்கொள்ளப்படும், கரைவலைத் தொழிலைத் தடைசெய்யக் கோரி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனிடம், யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் மனுக் கையளித்துள்ளனர்.**

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கரைவலை மீன்பிடித்தொழில், வலையை இழுப்பதற்கு மனித வலுவை மட்டுமே பயன்படுத்தும் பாரம்பரியத் தொழிலாகும்.

1986ஆம் ஆண்டின் சட்டத்தின்படி கரைவலை மீன்பிடியானது, இயந்திரம் பொருத்தப்படாத படகுகள் மூலம் வலை விரிக்கப்பட்டு, கரையிலுள்ள இரு குழுவினரால் கைகளின் மூலம் படிப்படியாகக் கரைக்குக் கொண்டுவரப்படுகின்றது. இதுவே இலங்கையின் பாரம்பரிய மீன்பிடி முறைகளில் ஒன்றாக இருந்துள்ளது. ஆனால் இன்று உழவியந்திரங்கள் மூலம் கரைவலை மீன்பிடியும் இயந்திரமயமாக்கப்பட்ட முறைகளுக்கு மாறிவருகின்றது. இதனால் கடல் வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படும். பிரதானமாக சிறுதொழில் செய்யும் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் தொழில் உபகரணங்களும் அழிக்கப்படுகின்றன. பாரம்பரியக் கரைவலை மீன்பிடித்தலானது இயந்திரமயமாக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டியதும், தடுக்கப்பட வேண்டியதுமான ஒன்றாகும். எனவே சிறுதொழில் மீனவர்கள் பயன்பெறும் வகையில், கரைவலை மீன்பிடித்தலைப் பாரம்பரிய முறையில் நடைமுறைப்படுத்தவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் துறைசார்ந்த அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும்-என்றுள்ளது. (க-20)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 19.02.2026 | வியாழக்கிழமை | 0818 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| G | 7 6 2 7 7 3 | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 19.02.2026 | வியாழக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3084 | M | 02 13 38 45 | |

| சனிதா DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 19.02.2026 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் | |
| Z | 38 52 70 71 | 5245 | |

| SASIRI DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.02.2026 | வியாழக்கிழமை | |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் | |
| 0914 | 05 34 43 | |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.02.2026 | வியாழக்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 05 13 25 29 | 4796 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 19.02.2026 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 23 | 21 27 39 65 | 2260 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.02.2026 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 01 04 20 21 | 2910 |

## ஜனாதிபதி மீது அவதூறு: ஐவர் கைது

கொழும்பு, பெப்.20

மத்தள அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலில் பொலிஸ் கடமைக்கு இடையூறு விளைவித்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை அவதூறாகப் பேசிய காணொலியை சமூக ஊடகங்களில் பகிர்ந்த குற்றச்சாட்டில் 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கடமையிலிருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட மூன்று பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## அதிநவீன உபகரணத் தொகுதிகள் பொலிஸ் சேவைக்கு கையளிப்பு

கொழும்பு, பெப்.20

இலங்கை பொலிஸ் சேவையை நவீனப்படுத்துவதற்கும், அதன் வினைத்திறனை மேம்படுத்துவதற்குமாக 556 மில்லியன் ரூபா பெறுமதியான அதிநவீன தொழில்நுட்ப உபகரணத் தொகுதியை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

அமைச்சில் நடைபெற்ற விசேட நிகழ்வின் போது, பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவிடம் இந்த உபகரணங்கள் அடையாள ரீதியாகக் கையளிக்கப்பட்டன.

இதனூடாக பொதுமக்களின் முறைப்பாடுகளை விரைவாகப் பதிவுசெய்தல், கோப்புகளை டிஜிற்றல் முறையில் பராமரித்தல், வீதிப்போக்குவரத்து விதிமீறல்களைக் கட்டுப்படுத்தல் என்பவற்றை உறுதிப்படுத்தமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கரிசல் வீட்டுத்திட்டத்துக்கு விரைவில் விமோசனம்!

### மன்னார் மாவட்டச் செயலர் வாக்குறுதி

மன்னார், பெப்.20

மன்னார் தீவுப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள புதிய நில அளவை மற்றும் வடிகால் அமைப்புத்திட்டத்தின் மூலம் வெள்ளத்தில் மூழ்கியுள்ள பெரிய கரிசல் 50 வீட்டுத்திட்டம் மீட்கப்பட்டு மக்கள் மீள்குடியேற வழிவகுக்கப்படும் என மன்னார் மாவட்டச்செயலர் க. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கரிசல் பகுதியில் அமைந்துள்ள அலாவூதீன் முஸ்லிம் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

மன்னார்த் தீவில் நில அளவை செய்யப்பட்டு, முறையான வடிகால் அமைப்புகள் உருவாக்கப்படும். இதற்கான அறிக்கை ஜூன் , ஜூலை மாதங்களுக்குள் கிடைக்கப்பெற்றதும் கரிசல் வீட்டுத்திட்டத்தில் தேங்கியுள்ள வெள்ளநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். வெள்ளநீர் வடிந்தவுடன், தற்போது இடம்பெயர்ந்துள்ள 50 குடும்பங்களும் மீண்டும் தமது வீடுகளில் குடியேறமுடியும். இதன்மூலம் இந்தப் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் - என்றார். (ச-60)

## மண்டைதீவு மைதானத்தால் வெளிநாட்டு முதலீடுகள்

### விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.20

மண்டைதீவில் விளையாட்டு மைதானத்தை அமைப்பதன் ஊடாக, வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன் வடக்கு மாகாணசபை மற்றும் பிரதேசசபைகளின் வருமானங்கள் அதிகரிக்கும் வாய்ப்புகளும் உள்ளன என்று விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ்.அச்சுதன் தெரிவித்துள்ளார். மண்டைதீவில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேசக் கிரிக்கெட் மைதான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் கிரிக்கெட் மைதானம் அமைப்பதன் ஊடாக விளையாட்டு நகரம் உருவாக்கப்படும். இதனூடாகப் பல்வேறு இணைந்த உட்கட்டமைப்பு வசதிகள், அதனுடன் இணைந்த சேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படும். சுற்றுச் சூழலுக்குப் பாதிப்புகள் ஏற்படாத வகையில், மத்திய சுற்றாடல் அதிகாரசபை இந்த விடயத்தைக் கையாளும்-என்றார்.

கலந்துரையாடலில் யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவிக்கையில், சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் தொடர்பாக ஏற்கனவே பல ஆரோக்கியமான கருத்தாடல்கள் பகிரப்பட்டுள்ளன. குறித்த மைதானத்தின் பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது பூர்த்தியாகியுள்ளன. சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கப்படுவதற்குக் [illegible] ஊடாக, அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்-என்றார். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் செயலாற்றலுக்கு ஐ.எம்.எப். பணிப்பாளர் பாராட்டு

**கொழும்பு, பெப்.20**

**சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டத்தின்கீழ் இலங்கை வெளிப்படுத்திய செயலாற்றம் ஒரு வெற்றிக்கதை என்று சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிஸ்டலினா ஜோர்ஜியேவா பாராட்டியுள்ளார்.**

இலங்கை வந்துள்ள ஜோர்ஜியேவா கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை மத்திய வங்கிக்குச் சென்று ஆளுநர் நந்தலால் வீரசிங்க மற்றும் மத்திய வங்கியின் மூத்த அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை நடத்தினார். அந்தச் சந்திப்பிலேயே இலங்கையின் செயலாற்றம் தொடர்பில் அவர் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார். அவசியமான கட்டமைப்பு மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, அவை தொடர்ந்து பேணப்படும் பட்சத்தில், இலங்கை மிக உயர்வான வளர்ச்சியை அடையும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (எ-இ)

## சமன் ஏக்கநாயக்கவுக்கு மன்று பிணை அனுமதி

கொழும்பு, பெப்.20

முன்னாள் ஜனாதிபதிச் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை பிணையில் செல்ல கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

சந்தேகநபரைத் தலா இரண்டு மில்லியன் ரூபா மதிப்புள்ள இரண்டு பிணைகளில் செல்ல கொழும்பு கோட்டை நீதவான் இசுரு நெத்திகுமார உத்தரவிட்டார். 2023ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரிட்டனுக்கு தனிப்பட்ட விஜயத்துக்கான நிதியை அங்கீகரித்து அரச நிதியை தவறாகப் பயன்படுத்தியதற்கு உதவிய குற்றச்சாட்டில் சமன் ஏக்கநாயக்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ச-இ)



## லங்கா சீனி நிறுவனத்தின் தலைவர் பதவி விலகல்

கொழும்பு, பெப்.20

லங்கா சீனி தனியார் நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து சட்டத்தரணி சந்தமாலி சந்திரசேகர விலகியுள்ளார்.

தனது பதவிவிலகல் கடிதத்தை கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்திக்கு அவர் அனுப்பியுள்ளார்.

சில மாகாண அரசியல்வாதிகளுடனான முரண்பாடுகள் அதிகரித்தமையே தனது பதவி விலகலுக்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ரணில் மனைவிக்கு சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு, பெப்.20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளுக்கு அமைவாக அவரது மனைவி மைத்திரி விக்கிரமசிங்கவை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக்குற்ற விசாரணைப்பிரிவு முன்னிலையில் இந்த மாதம் 20ஆம் திகதி முன்னிலையாகுமாறு மைத்திரி விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொலிஸார் எனப் பொய் கூறி பணம் வசூலித்தவர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப்.20

புத்தூர், வாதரவத்தையில் பொலிஸார் எனக் கூறி டிப்பர் வாகனச் சாரதிகளிடம் பணம் வசூலித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தூரப் பிரதேசங்களில் இருந்து மணல் ஏற்றிவரும் டிப்பர் வாகனங்களை மறித்து, அனுமதிப்பத்திரத்தில் குறைபாடுகள் உள்ளன என்று தெரிவித்து சாரதிகளிடம் பணம் வசூலித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. பொலிஸ் என்று பொறிக்கப்பட்ட உடை ஒன்றுடனே அவர்கள் பணம் வசூலித்துள்ளனர். அவர்களின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட டிப்பர் சாரதி ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நீர்வேலியைச் சேர்ந்தவர்கள் என்றும், சந்தேகநபர் ஒருவரிடம் இருந்து போதைமாத்திரை மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என்றும், போதைப்பொருள் வாங்குவதற்காகவே இவர்கள் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-23)

## நாமலின் க்ரிஷ் வழக்கு ஏப்ரலுக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.20

க்ரிஷ் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுகொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிநதீ அபர்ணா சுவந்துருகொட முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிரதிவாதி யான நாமல் ராஜபக்ச நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார். (ச-இ)



## புதினம் தெரியுமோ?

### எலக்சனுக்கு 'அம்மா' வர்த்தமானியில 'சும்மா'!

தேர்தல் நேரத்தில ரீ.வி.யில திசைகாட்டிக்காரர் காசுகட்டி, ஒரு விளம்பரம் போட்டவை, ஞாபகம் இருக்கோ? ஒரு தமிழ் அம்மா துலைஞ்சுபோன தன்ர ஐசியை (ஐடெண்டிக்கார்ட்டை) புதிசா எடுக்க ஒப்பீஸ் ஒண்டுக்குப் போய், அங்க எல்லாரும் சிங்கள ஆக்கள் எண்டு நினைச்சுக்கொண்டு, தனக்குத் தெரிஞ்ச அரைகுறைச் சிங்களத்தில ஐசி துலைஞ்ச விசயத்தைச் சொல்லுவா. அப்ப அங்க இருந்த ஒரு ஒப்பீஸர், 'அம்மா நீங்கள் தமிழிலேயே கதையுங்கோ' எண்டு சொல்ல, அந்த அம்மா அப்பிடியே உருகிப்போய் 'நீங்கள் திசைகாட்டியா?' எண்டு கேப்பா. பிறகு அந்த ஒப்பீஸர், அந்த அம்மா தமிழில தன்ர பிரச்சினையைச் சொல்ல, அதைத் தீர்க்கிறமாதிரி அந்த விளம்பரம் முடியும். அதைப் பார்த்த எல்லாரும் 'திசைகாட்டிக்காரர் ஆட்சிக்கு வந்தால், சிங்களம் தெரியாட்டியும் எங்க போயும் என்ன அலுவலும் செய்யக்கூடிய மாதிரியா நிலைமை வரும்'எண்டு புல்லரிச்சுப் போய், சில்லறையைச் சிதறவிட்டிருப்பினம். ஆனால், கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பான கதையா, இப்ப திசைகாட்டியின்ர மொழிக்கொள்கை 'தனிச்சிங்களச் சட்டம்' கொண்டந்த பண்டாரநாயக்கவின்ர காலத்துக்கே திரும்பிப்போட்டுது போல.

பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சை நடக்கப்போகுதெண்டு பெப்ரவரி 2ஆம் திகதி வர்த்தமானியில விண்ணப்பம் 'கோல்' பண்ணியிருக்கினம். 'documents.gov.lk' இணையத்தளத்தில வந்த வர்த்தமானியில அந்த விண்ணப்பம் சுத்தச் சிங்களத்தில மட்டும் தான் கிடக்கு. முந்தின அரசாங்க காலத்திலயாவது அரைகுறையா மூண்டு மொழியிலயும் தான் வர்த்தமானியில விண்ணப்பங்கள் வரும். ஆனா இப்ப 'முழுக்க முழுக்கச் சிங்களம்' தான் . ஏன் தமிழிலை அந்த விண்ணப்பம் வரேலை எண்டு கேட்டால், தமிழ் மொழிபெயர்ப்பு வர்றதுக்கு ஒரு கிழமை, ரெண்டுகிழமை எடுக்குமாம். தமிழில விண்ணப்பம் வர லேட் எண்டதால முடிவுத் திகதியை கொஞ்சம் நீடிச்சிருக்கினம். ஆனால் எல்லா மொழியிலையும் ஒரேயடியா விண்னப்பத்தைப் போட்டால் உந்தச் சிக்கல் ஒண்டும் இருக்காதே. இப்ப பொதுவாவே சுற்றுநிருபங்கள், திணைக்களக்கடிதங்கள் எல்லாமே தனிச்சிங்களத்திலதான் வருகுதெண்டு தமிழ் அதிகாரிமார் தலையில அடிச்சுக்கொள்ளுகினம். இப்பிடிச் சிங்களத்தை மட்டும் தூக்கிப் பிடிக்கிறவை, தமிழும் அரச கருமமொழி எண்டு எங்கட தலையில மிளகாய் அரைக்கிறது எந்தவகையில நியாயம் ?

எலக்சனுக்கு முதல் வந்த அந்த ரீ.வி. விளம்பரத்தில 'அம்மா தமிழில கதைக்கலாம்' எண்டு சொன்னவை, இப்ப வர்த்தமானிப் பக்கம் போனால் 'சிங்களம் தெரியாட்டி வேலை இல்லை' எண்டு சொல்லாமல் சொல்லுகினம் போல. தேர்தல் காலத்தில தான் 'திசைகாட்டி' தமிழருக்குத் திசை காட்டும் தேர்தல் முடிஞ்சா அது தெற்கால மட்டும் தான் சுத்தும் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தாவிடில் மீன்பிடி அமைச்சருக்கு எதிராகப் போராட்டம்

## மீனவர்கள் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், பெப்.20**

**இந்திய மீனவர்கள் தொடர்ந்தும், எமது கடல் வளத்தைச் சூறையாட அனுமதியளிக்கமுடியாது. இந்த விடயத்தில், கடற்றொழில் அமைச்சர் அசமந்தமாக இருந்தால், அவருக்கெதிரான போராட்டம் விரைவில் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் முகமட் ஆலம் எச்சரித்துள்ளார்.**

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் தீவகம் ஆகியவற்றின் கடற்றொழில் சமாசங்களின் பிரதிநிதிகள் பங்கேற்புடன் யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி செயலகம் முன் கரைவலைத் தொழிலை அனுமதிக்குமாறு கோரி, சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை சிலர் மேற்கொண்டனர். குறித்த தரப்பினரைச் சந்தித்த ஜனாதிபதி, நாட்டிலுள்ள சட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தார். சட்டத்தை மீறி அனுமதிக்கப்படாத ஒரு தொழிலைச் செய்ய அனுமதிப்பதால், ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் அவர்களுக்கு விளக்கியிருந்தார். அதையே தான் நாங்களும் கூறுகின்றோம் எந்தத் தொழில்முறைகள், அரசால் தடுக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தத் தொழில்முறைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும். ஒரு சிலரின் தேவைக்காகவும், அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்பதற்காகவும் தடைசெய்யப்பட்ட தொழில்முறைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அடுத்தவருக்கோ அல்லது கடல் வளங்களுக்கோ பாதிப்பை ஏற்படுத்துகின்ற தொழில்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இந்திய சட்டவிரோத மீன்பிடியாளர்களின் தொடர்வருகை யாழ்ப்பாணத்திலிருந்து தற்போது மன்னாரின் தென்கடல் குறிப்பாக புத்தளம் வரை அதிகரித்துள்ளது. ஆனால் இவ்விடயத்தில் அரசு மெத்தனப்போக்குடன் இருக்கின்றது. கடற்றொழில் அமைச்சர் கடற்றொழில் விடயங்களைத் தவிர, ஏனைய விடயங்கள் அனைத்தையும் வீரியமுடன் பேசுகின்றார். இந்த விடயத்தில் கடற்றொழில் அமைச்சர் அசமந்தமாக இருந்தால், அவருக்கெதிரான போராட்டம் விரைவில் முன்னெடுக்கப்படும்-என்றார். (சு-26)

# நற்செயல்களே ஆன்மாவின் அரண்

தவக்காலம் என்றதும் எம் சிந்தனையில் வருவது உணவுத்தவிர்ப்பு, நோன்பு, நடை, உடை, பாவனையில் எளிமை, கேளிக்கைகளைத் தவிர்த்தல், கட்டளைகளைக் கடைப்பிடித்தல் என்ற வரையறைகளாகும். இவற்றில் மட்டும் கவனம் செலுத்தும் நாம் எமது இதயத்து நல்வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி வாழத் தவறிவிடுகிறோம். மாறாக குடும்பப் பகை, சகோதர உறவுமுறிவு, அயலானின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தல், குறுக்குவழிப் பணத்தேடல், பணியாளரைத் துன்புறுத்துதல், வழக்காடுதல், சண்டையிடுதல், கொடுங்கை கொண்டு தாக்குதல், மனச்சாட்சியை சாகடித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தி இன்பம் காண்கிறோம். இதுவா தவக்கால நன்னெறி? இதுவா இறைவனுக்கு உகந்த நோன்பு? கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும் நுகத்தின் பிணையங்களை அறுப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும் அன்றோ இறைவன் விரும்பும் நோன்பு.

பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்வதும், தங்க இடமற்றோரை இல்லத்தில் தங்கவைப்பது, உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்குக் உடுக்கக் கொடுப்பது, உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு என்கிறார் ஆண்டவர். (எசா58:4 9)

அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும். வாழ்வு நலமாகும். நேர்மை உன்னோடு தங்கும். இறைபாதுகாப்பு உடனிருக்கும். உண்மையான நற்செயற்பாடுகள் நம்மையும், பிறரையும் உயர்த்தும்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

# புளியம்பொக்கணை பொங்கல்; முன்னேற்பாட்டுக் கூட்டம்

கிளிநொச்சி,பெப்.20

வரலாற்றுத் தொன்மை கொண்ட கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஆலய முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில், துறைசார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் ஆலயத் தொண்டர்களைப் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் பொங்கல் விழா எதிர்வரும் 25ஆம் திகதி விளக்கு வைத்தலுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பொங்கல் விழா நடைபெறும். (சு-55)



### வவுனியா மாநகரசபையின்

# பதில் ஆணையாளராக சிவரஞ்சினி நியமனம்

வவுனியா, பெப்.20

வவுனியா மாநகரசபையின் பதில் ஆணையாளராகத் திருமதி சிவச்செல்வன் சிவரஞ்சினி நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அவருக்கான நியமனக் கடிதத்தை உத்தியோகபூர்வமாக வழங்கினார். வவுனியா மாநகரசபையின் பதில் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி சிவச்செல்வன் சிவரஞ்சினி முன்னர் வவுனியா மாவட்டத் தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகக் கடமையாற்றியிருந்தார். (ச-66,110-9)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விடவும் இலாபம் குறைவாகவே கிடைக்கும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மிதுனம்:** நண்பர்கள்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக் கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள்மூலம் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன்–மனைவிக் கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள்.

**கும்பம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## சட்டவிரோதங்களைக் காக்கும் மதப்போர்வை

ஒரு தேசத்தின் சட்டவாட்சி என்பது அதன் கடற்கரை மணலைப் போன்றது; அது யாவருக்கும் சமமானதாக, பொதுவானதாக, அலைகளின் ஓட்டத்திற்கு ஏற்ப நீதியாக அமையவேண்டும். ஆனால், திருகோணமலை டச் பே கடற்கரையில் அரங்கேறியிருக்கும் நிகழ்வுகள், சட்டவாட்சி என்பது பெரும்பான்மைவாதத்தின் பலத்திற்கு முன்னால் எப்படி மண்டியிடுகிறது என்பதையே அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுகின்றன. வெறும் 127 சதுர அடிக்கு அனுமதி பெற்றுவிட்டு, 405 சதுர அடியை ஆக்கிரமித்து எழுப்பப்பட்ட ஒரு சிற்றுண்டிக்கடை, வெறும் வணிக அத்துமீறல் மட்டுமல்ல; அது ஒரு திட்டமிட்ட ஆக்கிரமிப்பின் தொடக்கப்புள்ளி என்பதை இன்று உணரமுடிகிறது. எப்போது ஒரு சட்டவிரோத கட்டுமானம் அகற்றப்படப்போகிறது என்ற செய்தி கசிகிறதோ, அதற்கு முந்தைய நாள் இரவே அங்கு ஒரு புத்தர் சிலை 'திடீர்' என முளைப்பதென்பது தற்செயலான நிகழ்வல்ல. அது சட்டத்தின் கரங்களைத் தடுத்து நிறுத்தப் பயன்படுத்தப்படும் ஒரு தந்திரோபாயக் கேடயம்.

வணிகத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்டுமானம், தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள மதத்தின் போர்வையைப் போர்த்திக்கொள்வது இந்த நாட்டின் துரதிர்ஷ்டவசமான சாபக்கேடு. ஒரு சிலையைக் காட்டி ஒட்டுமொத்த சட்டத்தையும் முடக்கிவிடமுடியும் என்ற நம்பிக்கை ஆக்கிரமிப்பாளர்களிடம் வேரூன்றியிருக்கிறது என்பதற்கு டச் பே கடற்கரை ஒரு கசப்பான உதாரணம். கரையோரப் பாதுகாப்புச் சட்டமும், மூலவளப் பாதுகாப்பு விதிகளும் ஒருபுறம் இருக்க, இனவாத உணர்வுகளைத் தூண்டிவிட்டு அதன் மூலம் குளிர்காய முற்படும் 'சிங்கள ராவய' போன்ற சக்திகளின் நடமாட்டம், திருகோணமலையின் இன நல்லிணக்கத்தின் மீது வீசப்பட்ட கல்லாகும். சட்டவிரோதக் கட்டுமானத்தை அகற்றச் சென்ற அதிகாரிகள், ஒரு சிலையைக் கண்டதும் பின்வாங்குவார்களாயின், அந்தச் சிலை ஒரு வழிபாட்டு அடையாளமாக அன்றி, சட்டத்தை மீறுவதற்கான ஒரு கருவியாகவே அங்கு பார்க்கப்படும்.

தற்போது அங்கு மதக்குரோத நடவடிக்கைகளைத் தூண்டிவிட எத்தனித்த பிக்குவான கஸ்ஸப்ப உள்ளிட்டோர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கலாம்; சட்டவிரோதக் கட்டுமானத்தின் ஒரு பகுதி நேற்றுத் திடீரென அவர்களாலேயே அகற்றப்பட்டிருக்கலாம். ஆனால், அங்கு எஞ்சியிருக்கும் ஒரு புத்தர் சிலையும், அது உருவாக்கியிருக்கும் இனவாத வடுக்களும் அவ்வளவு எளிதில் மறையப்போவதில்லை. ஒரு சட்டவிரோத கட்டுமானத்தை அகற்றுவதற்கு இத்தனை போராட்டங்களும், இத்தனை வாதப்பிரதிவாதங்களும் தேவைப்படுவது ஒரு நிர்வாகத்தின் இயலாமையையே காட்டுகிறது. தனியார் ஒருவரின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தமுடியாமல் போனதும், மத அடையாளங்களைப் பயன்படுத்தி அரச நிலத்தை அபகரிக்கும் போக்கைக் கண்டிக்கத் தவறியதும் எதிர்காலத்தில் இதுபோன்ற ஆக்கிரமிப்புகளுக்கே வழிவகுக்கும். இறுதியில், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதற்குப் பதிலாக, சட்டத்தின் கௌரவம் அங்கு பலியிடப்பட்டிருக்கிறது. திருகோணமலையின் எழில் கொஞ்சும் கடற்கரை இன்று ஒரு பேரினவாத அரசியலின் சதுரங்கக் களமாக மாறிவிட்டதுதான் காலக்கொடுமை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






### பொய்யாமொழி

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை**

**பொருள்:** இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.




## நீர்வெறுப்புநோயால் 14 பேர் உயிரிழப்பு



**கொழும்பு, பெப்.20**

**இலங்கையில் 2025ஆம் ஆண்டில் நீர்வெறுப்பு நோயால் 14 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் விசேட மருத்துவர் அத்துல லியன பத்திரன தெரிவித்துள்ளார்.**

நீர்வெறுப்பு நோயானது பாலூட்டும் விலங்குகளிடமிருந்து வைரஸ் மூலம் பரவும் ஒரு நோய். இது நூறு சதவீதம் மரணத்தை ஏற்படுத்தக் கூடிய நோயாகும்.

இந்த நோய்க்குச் சரியான நேரத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் இதனை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளமுடியும். விலங்கு கடித்ததன் பின்னர் ஓடும் நீரில் 15 நிமிடங்கள் கழுவுதல் மற்றும் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல், உரிய முறையில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது என்பன மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இலஞ்சம் பெற்றாரென காதி நீதிபதி கைது!

வாழைச்சேனை கோரளைப்பற்று காதி நீதிமன்றம் மற்றும் பொலநறுவை பதில் காதி நீதிமன்ற நீதிபதி ஒருவர் 5 ஆயிரம் ரூபா இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டாரெனக் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. திறந்த பிடியாணையை இரத்துச்செய்து கொள்வதற்காக, நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டிய பராமரிப்பு வழக்குத் தொடர்பான விவர அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட பிரதியொன்றை வழங்குவதற்காக 5,000 ரூபாவை அவர் இலஞ்சமாகக்கோரிப்பெற்றுக்கொண்டாரென அவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## அமெரிக்க கட்டளைத் தளபதி இலங்கையில்

கொழும்பு, பெப்.20

உலகின் மிகப்பெரிய கடற்படை கட்டளைப்பிரிவுகளில் ஒன்றான அமெரிக்க பசிபிக் கப்பற்படையின் கட்டளைத் தளபதியான அட்மிரல் ஸ்டீவ் 'வெப்' கேலர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் நாளைவரை இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு முக்கியமான சந்திப்புகளை நடத்த வுள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு, பிராந்திய ஸ்திரத் தன்மை மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக இலங்கை அரச அதிகாரிகளுடனும், இராணுவத்தின் உயர் அதிகாரிகளுடனும் அட்மிரல் கேலர் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கிழக்கில் கடும் மழை

திருகோணமலை, பெப்.20

கடந்த சில நாள்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பலத்த மழை பெய்து வருவதுடன் நேற்றுக் காலை முதல் கடற்பகுதிகளில் பலத்த காற்று வீசிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த மழை காரணமாக காத்தான்குடி, பூநொச்சிமுனை, நாவலடி, கல்லடி உள்ளிட்ட பல பகுதிகளில் நாளாந்த நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சாதாரண மக்களின் வாழ்க்கையும் முற்றாக ஸ்தம்பித்துள்ளது. கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் மீன்பிடி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாகப் பெய்துவரும் பலத்த மழை காரணமாக அந்தப் பகுதிகளிலுள்ள பல இடங்கள் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளன. (ச-இ)

## சுற்றிவளைப்புகளில் 549 பேர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 549 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. குற்றங்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 26 பேரும், பிடியாணைகளுக்கமைய 334 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 185 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 309 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 44 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய போக்குவரத்து குற்றங்களுக்காக 4,392 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

**நாளை**

சனிக்கிழமை - மாசி 09

21.02.2026

சுபநேரம் : 03.31 - 05.01

ராகுகாலம் : 09.31 - 11.01


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் மீதான அபிமானம் மாகாணத்தேர்தலில் வெளிப்படும்



## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.20**

**மாகாணசபைத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை நிச்சயம் வெளிப்படும் என்பது உறுதி என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.**

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு அதிகரித்துள்ளது. மிகுந்த நம்பிக்கையுடனேயே இதை நான் அறிவிக்கின்றேன். மாகாணசபைத் தேர்தலின்போது இது தெரியவரும். நிச்சயம் நாம் தேர்தலை நடத்துவோம். கிழக்கு மாகாணத்திலும் வெற்றிபெறுவோம்.

மாகாணசபைத் தேர்தலுக்குரிய உரிய ஏற்பாடுகள் நடந்த பின்னர் உரிய காலத்துக்குள் அது நடத்தப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

# மலையக உட்கட்டமைப்பு அரசு தலையீடு செய்யும்

## அமைச்சர் சமந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப்.20

பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் உட்கட்டமைப்பு வசதிகளை முறையாக முன்னெடுக்கத் தவறினால், அரசாங்கம் அதில் நேரடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கும் எனப் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற அமர்வில் ஆளுங்கட்சி உறுப்பினர் அம்பிகா சாமிவேல் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தோட்ட வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அந்தந்தத் தோட்ட நிறுவனங்களே முன்னெடுக்கவேண்டும். ஆனால், அவை முறையாகச் செய்யப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாங்கம் இதுதொடர்பில் இனி உரிய கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# சமூகக் கட்டமைப்பினுள் பாதாளக்குழு ஊடுருவல்

## தடுக்க நடவடிக்கையில்லையா? நாமல் எம்.பி. கேள்வி

கொழும்பு, பெப்.20

சமூகக் கட்டமைப்பில் பாதாளக்குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. எம்மை விமர்சித்துக்கொண்டிருக்காமல் பாதாளக்குழுக்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளைகள் மற்றும் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விவசாயிகளைப் பலப்படுத்தி நாட்டுமக்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதாக குறிப்பிட்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் விவசாயிகள், மீனவர்களைப் பலப்படுத்தாமல் வெளிநாட்டில் இருந்து உணவுப்பொருள்களை இறக்குமதி செய்து வர்த்தகர்களைப் பலப்படுத்துவதையே அரசாங்கம் செய்கின்றது. கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய பாதுகாப்புத் தொடர்பில் கதைக்கின்றீர்கள். யுத்தக் காலத்திலும் இங்கு கிரிக்கெட் போட்டிகள் நடந்துள்ளன. ஆனால் நீங்கள் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளதாகக் கூறும் நிலையில் உங்கள் கட்சித் தலைமையகத்திற்கு அருகில் இராணுவத் தலைமையகத்துக்கு அருகில் பாதுகாப்புப் பிரதேசத்தில் துப்பாக்கிச்சூடு நடக்கின்றது.

நாட்டில் தலைதூக்கியுள்ள பாதாளக்குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-இ)



# சட்டத்தின் ஆட்சியில் அரசாங்கம் பாரபட்சம்!

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, பெப்.20

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என ஜனாதிபதி கூறிவரும் நிலையில், அந்தச் சட்டம் பாரபட்சமாகச் செயற்படுத்தப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார். சட்டம் இவருக்கு எதிராகத் துரிதமாகச் செயற்படுகிறது. நாட்டின் பாதுகாப்புக்கும் பொருளாதாரத்துக்கும் அச்சுறுத்தலாக அமைந்த VFS விசா வழங்கல் முறைகேடு தொடர்பாக தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் மற்றும் நாடாளுமன்ற பொது நிதிக்குழு ஆகியவை தெளிவான அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன. இந்த மோசடி குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள போதிலும், கணக்காய்வாளர் அறிக்கையின் பரிந்துரைகளைச் செயற்படுத்தவோ அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கம் தயங்குவது ஏன்? - என்றார். (ச-இ)

# நிலக்கரி இறக்குமதியில் ஊழல்; மக்கள் மீது மின்கட்டணச் சுமை!

## சம்பிக்க முறைப்பாடு

கொழும்பு, பெப்.20

தற்போதைய அரசாங்கத்தின் நிலக்கரி இறக்குமதி கொள்முதல் செயற்பாட்டில் ஊழல் இடம்பெற்றுள்ளதென ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்றுமுன்தினம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கை மின்சாரசபை சமர்ப்பித்த தரவுகளின் அடிப்படையில் தரமற்ற நிலக்கரியை 4 கப்பல்களினூடான இறக்குமதி செய்ததன் மூலம் நாட்டுக்கு 1,759 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்குரிய ஒப்பந்தத்தின் கீழ் இன்னும் 25 நிலக்கரிக் கப்பல்களை இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. தற்போதைய தரமற்ற நடைமுறை தொடர்ந்தால், நாட்டுக்குச் சுமார் 1,099 கோடி ரூபா மேலதிக நஷ்டம் ஏற்படும்.

தரமற்ற நிலக்கரியால் நுரைச்சோலை மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் குறைந்துள்ளதுடன், இயந்திரங்கள் பழுதடையும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலக்கரி மோசடியால் நாட்டுக்கு ஏற்பட்ட பிரம்மாண்டமான நஷ்டத்தை ஈடுகட்டவே பொதுமக்கள்மீது மின்கட்டண உயர்வு சுமத்தப்படுகிறது.

75 இலட்சம் மின் நுகர்வோரின் உரிமைகளைப் பறிக்கும் என்றும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ச-இ)



# அரசின் கொள்கை மாற்றம்; மக்களுக்கு பெரும் ஏமாற்றம்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு


கொழும்பு, பெப்.20

கடந்த காலங்களில் தீவிர இந்திய எதிர்ப்புக் கொள்கையை முன்னிலைப்படுத்திச் செயற்பட்ட மக்கள் விடுதலை முன்னணியான ஜே.வி.பி. இன்று இந்தியாவுடன் நெருங்கி நட்பு பாராட்டுகிறது. காலத்துக்கு ஏற்ப தங்களது அரசியல் கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் இவர்களின் செயலால் பொதுமக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். இவ்வாறு நாடாளுமன்றில் உரையாற்றும் போதுஐக்கியமக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா முன்னதாக தீவிர இந்திய எதிர்ப்புக் கொள்கையைக் கொண்டிருந்தார். அந்தப் போராட்டங்களால் சுமார் 60,000 உயிர்கள் பலியாகின. அன்று இந்தியாவை எதிர்த்தவர்கள், இன்று இந்தியாவுடன் நெருங்கிய நட்பு பாராட்டுவதுடன், ஜனாதிபதியும் இந்தியாவுடன் இணக்கமாகச் செயற்படுகிறார். காலத்துக்கு ஏற்ப தங்களது அரசியல் கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் இவர்களின் செயலால் பொதுமக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்தன் – முல்லை வீதிப் பாலம்; கனரக வாகனங்களுக்குத் தடை



**கிளிநொச்சி, பெப்.20**

**பரந்தன் கரைச்சி-முல்லைத்தீவு ஏ-35 வீதியில் அமைந்துள்ள பாலத்தின் பாதுகாப்புக் கருதி, கனரக வாகனப் போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.**

'டித்வா' புயலுக்குப் பின்னர் இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட தற்காலிகப் பாலம் அண்மையில் ஏற்பட்ட தொடர்ச்சியான பாதிப்புகள் காரணமாக களப்பரிசோதனைகளின் பின் போக்குவரத்து தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.


பேருந்துகள் தவிர்ந்த ஏனைய அனைத்து விதமான கனரக வாகனங்களும் இந்தப் பாலத்தினூடாகப் பயணிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

பயணிகள் பேருந்துச் சேவைகள், பயணிகளைப் பாலத்துக்கு முன்பாக இறக்கிவிட்டு, பயணிகள் இன்றிப் பாலத்தினூடாகப் பயணிக்கமுடியும். ஏனைய அனைத்து வாகனங்களும் குறிப்பிட்ட வேகக் கட்டுப்பாட்டுடன் பயணிக்கமுடியும். பாலத்தின் நிலைமையின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, பாதுகாப்பு நடவடிக்கைக்காக விதிக்கப்பட்டுள்ள இந்த அறிவுறுத்தல்களைப் பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-113)

# பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்


யாழ்ப்பாணம், பெப்.20

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் வல்வெட்டித்துறைச் சந்தியிலுள்ள நகரசபை மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது. வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத் தலைவர் பா.வீரசுரேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் அனைத்துக் குருதிக் கொடையாளர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-66)











# யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நேற்றுக் காலை கோலாகல ஆரம்பம்!

## 4 நாள்கள், 12 அமர்வுகளில் 3,252 பேருக்குப் பட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப்பட்டமளிப்பு நேற்றுக் காலை கோலாகலமாக ஆரம்பமானது.

மரபார்ந்த பண்பாட்டு அணிவகுப்புடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல்கலைக்கழக வேந்தர் தகைசால் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா பட்டங்கள், பதக்கங்களையும் பரிசில்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை பன்னிரண்டு அமர்வுகளாகப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில், மூவாயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 94 தங்கப்பதக்கங்களும், 69 பரிசில்களும், 15 புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோணேஸ்வரர் நகர்வலம் ஆரம்பம்

திருகோணமலை, பெப்.20
திருஞானசம்பந்தரால் தேவாரம் பாடப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமான திருக்கோணேஸ்வரம் மாதுமையம்பாள் சமேத திருக்கோணைநாதரின் வருடாந்த நகர்வலம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது.

இந்த நகர்வலம் மணிக்கூட்டுச் சந்தி ஊடாக ஏகாம்பரம் வீதியூடாகச் சென்று செல்வநாயகபுரம், அன்புவெளிபுரம் ஊடாக பாலையூற்றைச் சென்றடைந்ததுடன் முதல் நாள் நகர்வலம் நிறைவு பெற்றது.

தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமையும் இந்த நகர்வலம் நடைபெறவுள்ளது. (ச-50)

# அச்சுதனுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.20
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ். அச்சுதன், யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனால் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டார். மண்டைதீவில் அமைக்கப்பட்டுவரும், சர்வதேசத் துடுப்பாட்ட மைதான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலுக்காக யாழ்ப்பாணம் வந்தபோதே இவர் கௌரவிக்கப்பட்டார்.

இவர் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராகவும், தேர்தல் திணைக்களத்தின் பிரதித் தேர்தல் ஆணையாளராகவும் பணியாற்றி, இலங்கை நிர்வாக சேவைகள் விசேட தரத்துக்குப் பதவியுயர்வு பெற்று, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக அண்மையில் பதவி பெற்று, யாழ்ப்பாணத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார். (66)





புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் திருமதி வனிதா அருட்செல்வன் தலைமையில் நடைபெற்றது. (ச-17)

கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான சித்திரப்போட்டியில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மாணவி ஜெ.சிந்துஜா திறமைத்துவ விருதை தனதாக்கினார். அவருக்கான பாராட்டு விழா பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றபோது பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச-17)





# தேசிய வாசிப்பு மாதத்துக்கான சான்றிதழ்கள் வழங்கிவைப்பு

கொழும்பு, பெப்.20
2024ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பிலுள்ள தேசிய நூலக ஆவணவாக்கல் சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட அளவெட்டிப் பொதுநூலகம், தெல்லிப்பழைப் பொதுநூலகம், காங்கேசன்துறைப் பொதுநூலகம், மயிலிட்டிப் பொதுநூலகம் ஆகிய பொதுநூலகங்களின் நூலகர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ-41-66)

# யாழில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.20
தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன், நல்லிணக்கம் மற்றும் சமூக நீதிக்கான பன்முகச்செயற்பாடுகள், சொண்ட் நிறுவனம் ஊடாக, சர்வமதக் குழுவுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் தொடர்பான கூட்டம், நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் சங்கிலியன் மன்ற மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. யாழ்.மாவட்ட சர்வமதக் குழுவின் இணைப்பாளர் ச.ஜெனிசியின் நெறிப்படுத்தலில், சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் நல்லிணக்கச் செயற்பாடுகளை ஏற்படுத்த யாழ். மாவட்ட சர்வமதக்குழு செய்ய



வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. தொடர்ந்து இக்னேசியஸ் கிளானி புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாகக் கருத்துரையாற்றினார். (சு-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு சட்டவரைவுகள் தொடர்பாக நீதிமன்றின் தீர்மானம் அறிவிப்பு

கொழும்பு, பெப்.20

அரசியலமைப்பின் 121.1 பிரிவின் கீழ் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட குடியிருப்பாளர்களைப் பாதுகாக்கும் சட்டவரைவு மற்றும் வாடகையை இரத்துச் செய்யும் சட்டவரைவு ஆகியவை தொடர்பில் முறையான தீர்மானம் எடுக்கவேண்டிய அவசியமில்லை என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள தாகச் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நீதி அமைச்சின் செயலாளரால் கடந்த 6ஆம் திகதி சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்ட தகவல் களின் அடிப்படையில், இந்தச் சட்டவரைவுகள் தற்போதைய வடிவில் முன்னோக்கிக்கொண்டு செல்லப்படமாட்டாது எனச் சபாநாயகர் குறிப்பிட்டார். மீளாய்வுக்காக நிபுணர் குழுவொன்றிடம் இந்தச் சட்டவரைவுகள் ஒப்படைக்கப்படவுள்ளன. அந்தக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய, அவை புதிய சட்ட வரைவுகளாக மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்றும் சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். இதனால் மனுதாரர்கள் தமது மனுக்களை மீளப் பெற்றுக்கொண்டுள்ளதால், அரசியலமைப்பின் 121.3 பிரிவின் கீழ் இதுதொடர்பாக முறையான தீர்மானத்தை அறிவிக்கவேண்டிய அவசியமில்லை என உயர் நீதிமன்றம் முடிவெடுத்துள்ளது. (எ-இ)

வீடு வாடகைக்கு
யாழ். நகரில் இருந்து 100m தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு. அறைகள் குறுகிய காலத்திற்கு (நாளாந்த அடிப்படையில்) வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
076 363 5249
(CS/60795) J-1

## ஆறாத துயருடன் ஆறாம் ஆண்டில்



முத்துலிங்கம் பிரேமாவதி

திதி: திருதியை

தோற்றம் 05.01.1943 மறைவு 27.01.2020

அன்பே உருவமான அன்னையின் பிரிவு
அது ஆண்டுகள் ஆறு ஆன போதிலும்
மீண்டு வர முடியவில்லை தாயே
நின் பிரிவு தந்த துயரிலிருந்து.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

வராகி அம்மன் வீதி,
கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/60784) J-1

# பின்னவல சரணாலயத்தில் சுதந்திர யானைகள் வனம்



கொழும்பு, பெப்.20

பின்னவல யானைகள் சரணாலயத்தின் 51ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு, யானைகளின் நலனை முன்னிறுத்தி அமைக்கப்பட்ட 'சுதந்திர யானைகள் வனம்' அண்மையில் திறந்துவைக் கப்பட்டது. இதனூடாக மதம்பிடித்த காலங்களில் ஆண் யானைகளைச் சங்கிலியால் பிணைக்காமல், விசாலமான மற்றும் பாதுகாப்பான இயற்கைச்சூழலில் பராமரிக்கப்படும்.

நவீன விலங்குநலத் தரநிலைகளுக்கு அமைய, யானைகளின் மன அழுத்தத்தைக் குறைத்து அவற்றுக்கு அதிக சுதந்திரம் வழங்குதல், இயற்கையான சூழலில் யானைகளைப் பார்க்கும் அனுபவத்தைச் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குதல் என்பன இதன் நோக்கமாகும். தற்போது இங்கு 27 ஆண் யானைகள் மற்றும் 38 பெண் யானைகள் உட்பட 65 யானைகள் பராமரிக்கப்பட்டுவருகின்றன. (ச-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 09 . 1951 இறப்பு 17 . 02 . 2026



### வைத்தியலிங்கம் கனகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற வருமான மேற்பார்வையாளர் - புத்தூர் பிரதேசபை)

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி, ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் கனகேஸ்வரன் (ஓய்வுபெற்ற வருமான மேற்பார்வையாளர்-புத்தூர்) பிரதேசபை கடந்த 17.02.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் (ஆயுள்வேத வைத்தியர்) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தனேஸ்வரன், பரமநாதன் (கனடா), புஸ்பராணி (லண்டன்), பகவதி (மலேசியா), சண்முகநாதன் (கனடா), கணேசமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற சூரியகுமாரி, உதயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, இராமநாதன், சிவஞானம், பத்மநாதன் மற்றும் கெங்கா, சாந்தா, ஜெகதீஸ்வரி, கதிரவேற்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், பாக்கியராணி மற்றும் பாக்கியலக்சுமி, யோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2026) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 656 8363

(CS/67081) N-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 02 . 1966 மறைவு 17 . 02 . 2026



### வடிவேலு முருகதாஸ்

வேலணை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு முருகதாஸ் அவர்கள் கடந்த (17.02.2026) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - இராசாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசதுரை - செண்பகவல்லி தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும், கஜீவன், சங்கீத்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கவியின் மாமனாரும், சாய்கரன், ஶ்ரீயான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
076 116 0121
077 873 9463

124/15, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS/60770) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திமுனையில் பணம்பறிப்பு; ரூ.70,000 இழந்த மன்னார்வாசி

கொழும்பு, பெப்.20
கொழும்பு பெற்றா பகுதியில் மன்னாரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரிடமிருந்து கத்திமுனையில் 70 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

தனது தையல் தொழிலுக்குத் தேவையான உபகரணங்களை மலிவு விலையில் வாங்குவதற்காக மன்னாரிலிருந்து கொழும்புக்குப் பேருந்தில் சென்றுள்ளார்.

பெற்றா பேருந்துத் தரிப்பிடத்தில் இறங்கி நடந்துசென்ற போது, மூன்று நபர்கள் அவரைப் பின்தொடர்ந்துவந்து மறித்து கத்தியைக் காட்டி மிரட்டி அவரிடமிருந்த பணப்பையைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் குறித்துப் பாதிக்கப்பட்ட நபர் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ச-56)

# ஈரானுடனான உறவை வலுப்படுத்த நடவடிக்கை

*அமைச்சர் நளிந்த தெரிவிப்பு*

ஈரான் மற்றும் இலங்கைக்கிடையில் நிலவிவரும் நீண்டகால நட்புறவை எதிர்வரும் காலங்களில் மேலும் வலுப்படுத்துவதற்குத் தேவையான விடயங்கள் முன்னெடுக்கப்படும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஈரானின் தேசியதின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

இலங்கையுடன் நீண்டகாலமாக இராஜதந்திர ரீதியிலான நட்புறவைக் கொண்டிருக்கும் ஈரான் சுனாமி, கொவிட்–19 மற்றும் டித்வா சூறாவளி போன்ற அனர்த்த நிலைமைகளின் போது எமக்கு ஆதரவாக இருந்தது.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் வணிகம், தொழில்நுட்பம், கலாசாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளின் மேம்பாட்டுக்கான திட்டங்களிலும் ஈரான் தனது ஒப்பற்ற பங்கை வழங்கியுள்ளது.

ஈரான் இலங்கைக்கு இடையிலான நட்புறவை வலுப்படுத்தத் தற்போதைய அரசாங்கம் கடுமையாகப் பாடுபடும். அதை வலுப்படுத்துவதற்கு அவசியமான விடயங்களும் மேற்கொள்ளப்படும் – என்றார். (ஏ-இ)

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்டது ரூ.63 கோடி

இலங்கை வரலாற்றில் முதல்முறை

கொழும்பு, பெப். 20
இலங்கை வரலாற்றில் முதல்முறையாக அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் 63 கோடி ரூபா வெல்லப்பட்டுள்ளது.

கப்ருக சீட்டிழுப்பிலேயே இந்தத் தொகை வெல்லப்பட்டுள்ளது என்றும், தென்னிலங்கையில் இந்த சீட்டு விற்கப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (ம)

# 'பிரஜாசக்தி' திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்கோம்

வேலணைப் பிரதேசசபையில் தீர்மானம்

கொழும்பு, பெப்.20
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள 'பிரஜாசக்தி' திட்டம் முழுமையான அரசியல் நோக்கத்தைக் கொண்டது. இந்தத் திட்டத்துக்கு நாம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் எனத் தெரிவித்து வேலணைப் பிரதேசசபை யில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணைப்பிரதேசசபையின்மாதாந்த அமர்வுநேற்றுமுன்தினம் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உறுப்பினர் செல்லப்பா பார்த்தீபனால் அரசின் பிரஜாசக்தித் திட்டத்தை எதிர்த்து முன்வைக் கப்பட்ட பிரேரணை விவாதத்துக்கு விடப்பட்டது.

இதற்கு உறுப்பினர்கள் குறித்த திட்டம் அரசியல் நோக்கம் கொண்டது. ஜே.வி.பி. என்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், அரச ஊழியர்களின் அதிகாரங்கள், சட்டவாக்கங்களை இந்தத் திட்டத்தின் ஊடாகக் கேள்விக்குறியாக்குகின்றது. இவ்வாறான ஒரு கட்டமைப்பை சபையின் ஆளுகைக்குள் திணிப்பதை அனுமதிக்கமுடியாது என சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய குறித்த பிரேரணைக்கு சபையின் மொத்த 22 உறுப்பினர்களில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நால்வர் எதிர்ப்பை வெளியிட்டிருந்த நிலையில் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ச-27)

# ஈழத் தமிழ் மக்களுக்கான பிரிட்டனின் ஆதரவு தொடரும்

துணைப்பிரதமர் வாக்குறுதி

கொழும்பு, பெப். 20
ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக பிரிட்டன் எப்போதும் துணைநிற்கும் என்று, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களிடம் பிரிட்டனின் துணைப் பிரதமர் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டனின் துணைப்பிரதமர் டேவிட் லாமி, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். இதன்போதே, ஈழத் தமிழர்களுக்கு பிரிட்டன் வழங்கிவரும் உறுதியான ஆதரவு தொடரும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களின் குரல்கள் சர்வதேச அரங்கில் கேட்கப்பட வேண்டும். அதற்கான தலைமைத்துவம் தற்போது பிரிட்டனால் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன், இலங்கையில் நீதியையும், சமத்துவத்தையும் முன்னிறுத்துவதில் பிரிட்டனின் உறுதியாகவுள்ளது. இதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவோம் என்றும் டேவிட் லாமி கூறியுள்ளார். (ம)

பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் - 2026
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எமது பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டமானது 07.03.2026 சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். எனவே, அன்றைய தினம் அனைத்துப் பெற்றோர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்
பாடசாலை அபிவிருத்திக் குழு

அதிபர்
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

# தயாசிறியின் உறுப்புரிமை நீக்கம்; நீதிமன்றம் இடைக்கால தடை

கொழும்பு, பெப்.20
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்குத் தடைவிதித்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை இடைக்காலத் தடை உத்தரவுபிறப்பித்துள்ளது.

தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்ட தீர்மானத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவைப் பரிசீலித்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராகத் தயாசிறி ஜயசேகர பணியாற்றுவதற்கு இடையூறு விளைவிப் பதைத் தடுக்கும் வகையில் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



மூளாய் தெற்கு சுழிபுரம்
கருணாகர ஐயா
அவர்களின் செல்லக்குட்டி
ஸ்வர்ணா (வர்ணா)
அவர்கள்
இன்று (20.02.2026)
வெள்ளிக்கிழமை
University of Jaffna
40th General Convocation - 2026
BBA Hons in
Human Resource Management
பட்டத்தினை பெறுகின்றார்.
அவரை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
அவர்மென்மேலும் பல பட்டங்களை பெற
குல தெய்வத்தை பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துபவர்கள் :- அப்பம்மா
அத்தைமார், சித்தப்பாமார்.
(யாழ்ப்பாணம்)
(CR/47075) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக...

பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது பாதுகாப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக கடற் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா கடற்படையாலேயே மேற்படி தமிழக மீனவர்கள் 22 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தப்பட்ட நான்கு படகுகளும் இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன. விசாரணைக்குப் பின்னர் அவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் நீரியல்வளத் திணைக்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கைது நடவடிக்கைக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், நாம்தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிடுமாறு இந்திய பிரதமர் அலுவலகத்துக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார்.

அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், இரு தினங்களுக்கு முன்னர் தமிழக மீனவர்கள் 25 பேர் கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-100-66)

## நிழல்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் பிமல் ரத்நாயக்க அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இதன்போது, வடமாகாணத்தில் நிழல் அமைச்சர்களை நியமித்து அவர்கள் ஊடாக ஆட்சியைக் கொண்டுநடத்துமாறு அவர் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு உத்தரவிட்டுள்ளார். இதை நான் பொறுப்புடன் கூறுகின்றேன். சுகாதாரத்துறைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜாவும், கல்வி அமைச்சுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனும், மகளிர் விவகாரத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவனும், உள்ளாட்சி சபைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனும், விவசாயம் மற்றும் கால்நடைத் துறைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் சுகாதார அமைச்சு சார்பான கூட்டம் அண்மையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜா அதில் அழைக்கப்பட்டிருந்தார். எந்த அடிப்படையில் அவரை அழைத்தீர்கள்? அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைத்திருக்க வேண்டும். அதைவிடுத்து, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகக் கேவலமான மனோநிலை.

வடக்கு மாகாணசபைக்கு எதிரானவர்கள் என்றும், அந்த நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிராகக் போராடி உயிர்த்தியாகம்கூட செய்தவர்கள் எனவும் கூறுகின்றீர்கள். ஆனால், அதே மாகாணசபைக் கட்டமைப்பில் திருட்டுத்தனமாக உங்களின் ஆட்களைப் புகுத்துகின்றீர்கள். இதுவொரு முதுகெலும்பில்லாத பண்பு. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என அரசைக் கோருகின்றோம் - என்றார். (அ-ம-26)

## யாழ்ப்பாணத்தில்...

சீரான முறையில் இல்லை. இதனால், பரவலாகத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே, வடமாகாணத்திலும் அந்தத் தட்டுப்பாடு கடந்த இரு தினங்களாக ஏற்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் எரிவாயு இருப்பு நேற்று முற்றாக அற்றுப்போயிருந்தது. (அ-ம-26)

## பயங்கரவாதத்...

பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. நேற்று ஆரம்பித்த போராட்டம் நாளைமறுதினம்வரை தொடரவுள்ளது. (அ-ம-66-26)

## எரிவாயு...

டுள்ள நிலையில், லிட்ரோ நிறுவனம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் உள்ள தாவது:-

எரிவாயுவுக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லை. எதிர்காலத்திலும் அத்தகைய தட்டுப்பாடுகள் எவையும் ஏற்படாது. கடந்த 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் 6 லட்சத்து 35 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள்

விநியோகிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களிலும் சீரான விநியோகம் தொடரும் - என்றுள்ளது. (அ-ம)

## காங்கேசன்...

றுக் களப்பயணம் மேற்கொண்டபோதே அவர், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தார். காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக விரைவில் இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-ம-26)

## யாழ். விமான...

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை விஸ்தரிக்கும் பணிகள் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்றன. இந்தப் பணிகளை அமைச்சர் அநுர கருணாதிலக நேற்றுப் பார்வையிட்டார். இதன்போதே, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கம்செய்யும்பணிகள் துரிதகதியில் இடம்பெறும் என்று கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக உள்ள போதிலும், வளப்பற்றாக்குறைகள் மற்றும் இதர வசதிகள் உரிய வகையில் இல்லை. இந்தக் குறைபாடுகள் அனைத்தும் விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இந்தக் களப்பயணத்தில் சிவில் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் டபிள்யூ.டபிள்யூ.எஸ்.மங்கள, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சுனில் ஜயரத்ன, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கப்டன் தமிந்த ரம்புக்வெல, வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரும் உடனிருந்தனர். (அ-ம-66)

## இராணுவத்திடம்...

உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆயுதங்களைக் கைவிட்டுச் சரணடைவது மட்டுமே பிரபாகரனுக்கு முன்புள்ள ஒரே தெரிவு என போர் இடம்பெற்ற காலத்திலேயே மஹிந்த ராஜபக்ச கூறியிருந்தார். பிரபாகரனையோ அல்லது விடுதலைப் புலிகளின் வேறு தலைவர்களையோ இராணுவத்திடம் அல்லாமல் மூன்றாம் தரப்பிடம் சரணடையச் செய்வதை மஹிந்த ராஜபக்ச விரும்பவில்லை. இதை மஹிந்த ராஜபக்சவே வெளிப்படையாக ஏற்றுள்ளார். எனவே, பொன்சேகா தெரிவித்த கருத்துக்களில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

குறைந்தளவு சேதங்கள், குறைந்தளவான உயிரிழப்புகளுடன் போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதே மஹிந்த ராஜபக்சவின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதற்கு தேவையான நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்தார். புலம்பெயர் புலிகள் மற்றும் தற்போதைய அரசாங்கம் கூறுவதுபோல மஹிந்த ராஜபக்ச கொலையாளி அல்லர் என்பதை பொன்சேகா உறுதிப்படுத்தியுள்ளார். அதற்காக அவருக்கு நன்றி - என்றார்.

**பொன்சேகா கூறியதென்ன?**

இறுதிப்போரில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் பொன்சேகா நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பை நடத்திக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை ஊடாக சரணடையத் திட்டமிட்டனர். இதை ராஜபக்சக்களும் பரிசீலித்தனர். ஆனால், இராணுவம் அதை ஏற்கவில்லை. இராணுவத்திடம் மட்டுமே பிரபாகரனும் ஏனைய புலிகளும் சரணடைய வேண்டும் என்பது இராணுவத்தின் நிலைப்பாடாக இருந்தது. விடுதலைப் புலிகள் இராணுவத்திடம் சரணடைய மறுத்ததால் அந்தத் திட்டம் தோல்வியடைந்தது.

விடுதலைப் புலிகள் தலைவர்கள் இராணுவத்திடம் சரணடைய ஒப்புக்கொண்டிருந்தால், பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இன்னும் உயிருடன் இருந்திருப்பார்கள். பிரபாகரன் வடக்கின் முதலமைச்சராக இருந்திருப்பார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி 400 மீற்றர் பரப்பளவுக்குள் விடுதலை புலிகளின் தலைவர்கள் சுற்றிவளைக்கப்பட்டனர். அடுத்த சில மணிநேரங்களுக்குள் தாம் உயிரிழந்துவிடுவோம் என்பது விடுதலைப் புலிகளுக்குத் தெரிந்திருந்தது. இராணுவம் விடுதலைப் புலிகளின் தலைவர்களைக் காப்பாற்ற விரும்பவில்லை, மாறாக அவர்களை அழிக்கத்திட்டமிட்டிருந்தது. ராஜபக்சவின் கோரிக்கையை ஏற்க மறுத்ததால், மே 19ஆம் திகதியன்று விடுதலைப் புலிகளை முற்றிலுமாக ஒழிக்கமுடிந்தது - என்றார். (அ-ம-44)

## நயினாதீவு...

ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40ஆவது பட்டமளிப்பு விழா நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது. இதன்போதே, மருத்துவத் துறையில் 8 தங்கப் பதக்கங்களைப் பெற்று யாழ்ப்பாணம் நயினாதீவு மண்ணைச் சேர்ந்த மருத்துவபீட மாணவி அபிராமி நற்குணம் சாதனை படைத்துள்ளார். அவருக்குப் பாராட்டுக்களும், வாழ்த்துகளும் குவிந்து வருகின்றன. (அ-ம-20-26-66)

## யாழ். பல்கலைப்...

இரு மாணவர்கள் பட்டம் பெறவுள்ளனர். துரைராசா அருண்குமார், சிவபாதசுந்தரம் அனந்தினி ஆகிய மாணவர்களே இவ்வாறு பட்டம் பெறவுள்ளனர். பொதுக் கலைமாணிப் பட்டம் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதேவேளை, கடந்த ஆண்டு இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பட்டமளிப்பு விழாவிலும் சுன்னாகம் வாழ்வக மாணவர்கள் மூவர் பட்டங்களைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## இராணுவத்தின்...

உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரை தொடர்பில் கொழும்பில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், பௌத்த சாசன அமைச்சின் அதிகாரிகளும், அரச அதிகாரிகளும், திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் கலந்துகொண்டனர். ஆனால், காணிகளை இழந்த மக்கள் இதில் கலந்துகொள்ள அழைக்கப்படவில்லை. இது எந்த வகையில் நியாயம்?

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கும் அரசாங்கத்துக்கும் அல்லது பௌத்தத்துக்கும் தொடர்பில்லை. இராணுவமே இந்த ஆக்கிரமிப்பைச் செய்தது. அப்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாதான் இந்த விகாரையை அமைப்பதில் முழுமூச்சாகச் செயற்பட்டார். இன அழிப்பில் ஈடுபட்ட இராணுவத்தின் மற்றொரு கோரமுகமே தையிட்டி திஸ்ஸ விகாரையாகும். எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் நீதியான முறையில் தலையிட வேண்டும்.

மக்களின் காணிகளை மக்களுக்கு வழங்குவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்குவந்த ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம், இவ்வாறான மோசமான செயல்களுக்குத் துணை போகக்கூடாது - என்றார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு உற்பத்திகளை அதிகரிப்பது அவசியம்

### வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் வலியுறுத்து

கிளிநொச்சி,பெப்.20

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் வறுமை நிலைமையில் இருப்பதால், இரு மாவட்டங்களிலும், உணவுப்பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, உணவு உற்பத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தலில் கவனம் செலுத்தவேண்டும் என்று வடக்கு மாகாண விவசாயமும், கமநல சேவைகள்,கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சிவசிறீ வலியுறுத்தினார். மாவட்ட உணவுப்பாதுகாப்புத் தொடர்பான முதலாவது கூட்டம், கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விவசாய நடவடிக்கைகளுடன் இணைந்ததாக, உப உணவுப் பயிர் உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலம், போஷாக்கான உணவு கிடைப்பதை உறுதி செய்யமுடியும். அதற்காக தரமான விதைகளைப் பெற்றுக் கொள்வதுடன், களைகளைக் கட்டுப்படுத்துவதும் அவசியம். மேலும் இங்கு நன்னீர் மீன்பிடிகான வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதால், அதனை அதிகம் மேற்கொள்ளமுடியும். அத்துடன் பெறுமதி கூட்டப்பட்ட போஷாக்கான உணவு உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதும் அவசியம். இந்தச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம், திட்டங்களைச் சிறப்பாக முன்னெடுக்கமுடியும்-என்றார். (க-113)

## விருதுத் தெரிவுக்கான நடுவர் குழுவுக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.20

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகு ஒவ்வொரு வருடமும் வழங்கும், உயரிய விருதுகளான கலைக்குரிசில், இளங்கலைஞர், சிறந்த நூல்விருது ஆகியவற்றுக்கான மதிப்பீட்டுப் பணிகளுக்கு, நடுவர் குழுவினரைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி, வடக்கு மாகாணத்தின் உயரிய விருதுகளான கலைக்குரிசில் மற்றும் சிறந்த நூல்விருது ஆகியவற்றுக்கு விண்ணப்பித்திருந்தால், மாகாண நடுவர் தெரிவுக்கு விண்ணப்பிக்க முடியாது. அத்துடன் விண்ணப்பிக்கும் துறையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி கலைத்துறைக்காக ஆற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கும் பங்களிப்பு விவரங்கள் தொடர்பான ஆவணங்கள் இணைக்கப்பட்டு, அவை கலாசார உத்தியோகத்தர் மூலமாக உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இலக்கியத்துறை சார்ந்த நடுவர்களாகப் பணியாற்ற விண்ணப்பிப்பவர்கள், இலக்கியக் கர்த்தாக்களாக இருப்பின், தங்கள் துறைசார்ந்த இலக்கிய முயற்சிகளில் குறைந்தது இரண்டு நூல்களையாவது வெளியிட்டிருக்கவேண்டும். கலைத்துறை சார்ந்த நடுவர்களுக்கு விண்ணப்பிப்பவர்கள், நடுவர் துறையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட கலை அனுபவத்தைக் கொண்டிருப்பதோடு, அதனைச் சான்றுகளுடன் உறுதிப்படுத்தவேண்டும். துறைசார்ந்த கலைத்துறையில் குறைந்தது 5 படைப்புகளையாவது சொந்தப்படைப்பாகச் செய்திருத்தல் வேண்டும். சகல துறைகளுக்கும் விண்ணப்பிப்போர் 45 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் கலை, இலக்கியப் படைப்புகள் சமூக வெளியில் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர், விண்ணப்பங்களை உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கமுடியும். விண்ணப்பப்படிவத்தை பண்பாட்டலுவல்கள் அலகில் அல்லது தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது கல்வி அமைச்சின் www.edumin.np.gov.lk எனும் இணையத்தளத்திலும், மேலதிக விபரங்களை 0212054105/0213202568 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டும் அறியமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.20

வடக்கு மாகாண பொதுச்சேவையில் நிலவும் தொழில்நுட்பவியல் சார்ந்த பதவிகளுக்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான, திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மண் பரிசோதகர் மாகாணத் தொழில்நுட்பவியல் சேவை (தரம் III அல்லது பயிற்சித் தரம்), ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் (வடக்கு மாகாணத் தொழில்நுட்பவியல் சேவை தரம் III), வேலை மேற்பார்வையாளர் (வடக்கு மாகாணக் கட்டடங்கள் திணைக்களம் தரம் III) ஆகிய பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப விவரங்கள் அடங்கிய முழுமையான தகவல்களை, வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் 'Exam and Recruitment Advertisement' எனும் பகுதியில் பார்வையிடமுடியும். தகுதியுடையவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-66)

**பாவித்த பொருட்கள் விற்பனைக்கு**

**இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி,
தொழில்நுட்ப நிறுவனம்,
வட்டுக்கோட்டை.**

**காலம் : 21,22,23 - 02.2026**

**நேரம் : காலை 9.00 மணி - மாலை 4.00 மணி**

**விபரம் :** மோட்டார் வாகனங்கள், கடைச்சல் இயந்திரங்கள் மின் இலத்திரனியல் உபகரணங்கள், கருவிகள் கணினிகள், குடிசார் தொழில்நுட்ப உபகரணங்கள், கருவிகள், தச்சு வேலைக்குரிய பட்டறைகள் கருவிகள் தொழில்நுட்ப கற்பித்தலுக்குரிய சோதனை உபகரணங்கள்.

**குறிப்பு:** மேற்படி பொருட்களை பார்வையிட்டு விலை கோரலை சமர்ப்பிக்கலாம்.

**தொடர்புக்கு:**

**021 225 0975, 077 610 2715**

(CS 60793) A

**வேலையாட்கள் தேவை**

**யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றுக்கு குடும்பமாக தங்கிநின்று பணிபுரிவோர் தேவை.**

- 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- கால்நடை வளர்ப்பு, தோட்ட வேலை மற்றும் வீட்டு வேலையில் அனுபவம் அவசியம்.
- தங்கி நின்று வேலை செய்தல் கட்டாயமாகும்.
- தங்குமிடம் வழங்கப்படும்
- சம்பளம் அனுபவத்தின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்
- வன்னி பிரதேசத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

(CS/31310) J-1

தொடர்புகளுக்கு:- **070 140 5814**

## ஊழல் மோசடி: பதிவாளர் கைது

*கொழும்பு, பெப்.19*

*அக்கரைப்பற்று பகுதியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளராகப் பணியாற்றும் உதவிப் பதிவாளர், பிறப்புச் சான்றிதழைப் பதிவுசெய்ய வந்த ஒருவரிடம் 1,000 ரூபா இலஞ்சம் கேட்டு அதிலிருந்து 500 ரூபா பெற்றாரென இலஞ்ச ஒழிப்பு ஆணையம் அவரைக் கைதுசெய்துள்ளது. கைதுசெய்யப்பட்டவரை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)*

## 27 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, பெப்.20

ஹம்பேகமுவ பகுதியில் கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹம்பேகமுவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. இதன்போது சந்தேகநபரிடமிருந்து 27 கிலோகிராம் 800 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் ஹம்பேகமுவ பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹம்பேகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் இளந்தைக்குளம் வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- மாம்பழச் சந்தியிலிருந்து 350m தூரம்.
- ஒரு பரப்பின் விலை 48 லட்சம்

**தொடர்புகளுக்கு:-**

**076 860 2770, 076 987 8617**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org